# விதிகளைத் தளர்த்தி உதவிகள் வழங்கல்! - – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

முதல் பக்கத் தொடர்ச்சி

76 நபர்கள் தென்காசி மாவட்டத்திலும், 49 நபர்கள் தூத்துக்குடி மாவட்டத்திலும், 18 நபர்கள் தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும், 9 நபர்கள் பிற மாநிலங்களிலும் குடியேற விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர். அவர்களின் விண்ணப்பங்களைப் பெற்று அதற்கான அனைத்து உதவிகளையும் செய்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நேர்வில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாஞ்சோலை தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மூலம் பெறப்பட்ட அறிக்கைகள், பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகள் உள்ளிட்டவற்றை விரிவாகப் பரிசீலித்து, அவர்களுக்கு அரசின் சில விதிகளை தளர்வு செய்து பல்வேறு உதவிகளை வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, அவர்களுக்கு பின்வரும் உதவிகளை வழங்கிட உத்தரவு வழங்கப்பட்டு, அதனடிப்படையில் நீதிமன்றத்திலும் அவை மாவட்ட ஆட்சியரால் அறிக்கையாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**1.கிராமப் பகுதிகளில் குடியேற விரும்பும் வீடற்ற தொழிலாளர்களுக்கு தற்போதைய அரசு விதிமுறைகளைத் தளர்வு செய்து சிறப்பினமாகக் கருதி அவர்களின் விருப்பத்தின் பேரில் இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் “கலைஞர் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ் வீடு கட்டித் தரப்படும்.**

**2.திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு தயார் நிலையிலுள்ள அம்பாசமுத்திரம் வட்டம், பாப்பாங்குளம் கிராமத்தில் 240 அடுக்கு மாடிவீடுகள் மற்றும் திருநெல்வேலி மாநகரம், ரெட்டியார்பட்டி பகுதியில் பணி முடிவடையும் நிலையிலுள்ள அடுக்குமாடி வீடுகள் ஆகியவற்றை முன்னுரிமை அடிப்படையில் விருப்பமுள்ள, ஏற்கனவே வீடு இல்லாத மாஞ்சோலை தொழிலாளர்களுக்கு விலையின்றி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**3.தொழிலாளர்களில், 55 வயதிற்குட்பட்ட பட்டியல் இனத்தைச் சார்ந்த வாழ்வாதார வசதி தேவைப்படும் தொழிலாளர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தில் (AABCS ) புதிய தொழில் தொடங்க 35% மானியம் மற்றும் 6% வட்டிச் சலுகையுடன் சுய தொழில் தொடங்க கடன் வழங்கப்படும்.**

**4.இதர பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் (NEEDS) கீழ் 25% மானியம் மற்றும் 3% வட்டி சலுகையுடன் அதிகபட்சமாக ரூ.75 இலட்சம் வரை சுயதொழில் தொடங்க கடன் வழங்கப்படும்.**

**5.தகுதியுள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (Tamil Nadu Skill Development Corporation) மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார மையம் (Tamil Nadu State Rural Livelihood Mission) மூலம் திறன் பயிற்சி வழங்கப்படும்.**

**6.திறன் பயிற்சி முடிப்பவர்களுக்கு தனியார் துறையில் உரிய வேலைவாய்ப்புப் பெற்று வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.**

**7.சிறிய பால் பண்ணைகள் அமைத்தல், கறவை மாடுகள், ஆடுகள் வாங்குதல் ஆகியவற்றிற்காக ஆவின் நிறுவனம் மற்றும் கூட்டுறவுத் துறை மூலம் வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.**

**8.பெண்களுக்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் ரூ.1.50 இலட்சம் வரை சிறு கடன்கள் வழங்கப்படும்.**

**9.பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் கல்வி பாதிக்காத வகையில் அவர்கள் விரும்பும் அரசுப் பள்ளியில் அவர்களைச் சேர்க்கவும், அரசு விடுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.**

**10.தொழிலாளர்கள் குடியேற விரும்பும் முகவரிக்கு அவர்களது குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை சிறப்பு முகாம்கள் மூலம் சிரமமின்றி மாற்றம் செய்து தரப்படும்.**

**11.தொழிலாளர்களுக்கு நிறுவனம் வழங்க வேண்டிய மீதமுள்ள 75% கருணைத் தொகை நீதிமன்ற உத்தரவுபடி வழங்கிடவும், அவர்களுக்கு விதிப்படி வழங்கப்பட வேண்டிய மாதாந்திர ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்து சட்டப்பூர்வ பலன்களும் முறையாக வழங்கப்படுவதை உறுதி செய்திட தொழிலாளர் நலத் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.**

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி, மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மறுவாழ்வுக்குத் தேவையான அனைத்து உதவி களையும், அவர்களுக்கான குடியிருப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்திற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளுமென திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சர் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்கள்.

### முன்னாள் அமைச்சர் - விருதுநகர் மாவட்ட முன்னாள் செயலாளர்

## வே.தங்கப்பாண்டியன் 27வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

### விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிக்கை!

விருதுநகர், ஜூலை 29-

விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் இராமசந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க.செயலாளரும், தமிழக நிதி மற்று மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சருமான.தங்கம் தென்னரசு அவர்களின் தந்தையாரும், நமது மாவட்ட தி.மு.கழக முன்னாள் செயலாளருமான முன்னாள் வணிக வரித்துறை அமைச்சரும், நம் நினைவில் என்றென்றும் வாழ்ந்து வரும் மறைந்த வே.தங்கப்பாண்டியன் அவர்களின் நினைவு நாளான 31.07.24 புதன் கிழமை காலை 09.00 மணிக்கு மல்லாங்கிணற்றில் உள்ள வே.தங்கப்பாண்டியன் அவர்களின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தப்பட உள்ளது. அது சமயம், சட்ட மன்ற உறுப்பினர்கள், தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நக ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட அமைப்புகளின் இந்நாள், முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் ஊர்வலமாக இல்லாமல் தனித் தனியே தங்களது அஞ்சலியினை செலுத்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மாவட்டம் , திருவில்லிபுத்தூரில் ஆண்டாள் திருக்கோவில் திருத்தேர்வலம் வரும் பகுதியில் , தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம் சார்பில் ரூ .1.82 கோடி மதிப்பில் மேல்நிலை மின் கம்பிகள் , புதைவட மின் பாதைகளாக மாற்றப்பட்டுள்ளதை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தனர் . உடன் ஒன்றிய செயலாளர் மல்லி ஆறுமுகம் இருந்தார்.

### விமானங்கள் அடிக்கடி ரத்து செய்யப்படுவதால்

## பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் களைய நடவடிக்கை எடுத்திடுவீர்!

### ஒன்றிய விமானத்துறை அமைச்சருக்கு - கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜூலை 29-

அடிக்கடி பயணிகள் விமானங்கள் சேவையை இரத்து செய்வதால் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் களையக் கோரி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி ஒன்றிய சிவில் விமானத்துறை அமைச்சர் திரு. கிஞ்சராபு ராம்மோகன் நாயுடுவுக்கு கடிதம் எழுதி உள்ளார்.



அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது :

சமீபத்தில் லட்சதீப் தீவுகளின் தலைநகரமான அகாட்டிக்குச் சென்ற கேரளப் பயணிகள் மீண்டும் கேரளத்துக்குத் திரும்ப இருந்த அலையன்ஸ் ஏர் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் இரத்து செய்யப்பட்டதால் கடும் சிரமத்துக்கு உள்ளாயினர். நூற்றுக்கணக்கான பயணிகள் தங்கள் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுடன் இரண்டு நாட்கள் தங்குவதற்கு இடம் மற்றும் உணவு இன்றித் தவித்தனர். அலையன்ஸ் ஏர் விமான நிறுவனம் தனது சேவையை கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறுத்திவிட்டது. சுற்றுலா சென்ற பயணிகள் தாங்கள் தங்கி இருந்த ஓட்டல்களை காலி செய்துவிட்டு விமான நிலையத்திற்கு வந்த போது தான் விமானச் சேவை நிறுத்தப்பட்டதை அறிந்துள்ளனர்.

இன்னும் சிலருக்கு விமானப் பயணத்திற்கான போர்டிங் பாஸ் வழங்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் பயணம் செய்ய இருந்த விமானம் இரத்து செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்குவதற்கு இடமும் இன்றி உணவும் இன்றி தவித்தனர். பயணிகள் தாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்து தரும்படி கோரியதற்கு அலையன்ஸ் ஏர் விமான நிறுவன ஊழியர்கள் மறுப்பு தெரிவித்ததாகவும், வேண்டுமானால் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டுக் கொள்ளுங்கள் என்று ஆணவத்துடன் பேசியதாகவும், மேலும் ஒரு ஊழியர் வேண்டுமானால் இந்த அறிவிப்பைப் பதிவு கூட செய்து கொள்ளுங்கள் என்று கூறியதாகவும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கடும் இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்ட பயணிகளில் கோழிக்கோடு செல்ல பதிவு செய்திருந்த 25 முதிய வயதினரைக் கொண்ட ஒரு குழுவினரும் இருந்துள்ளனர். அவர்கள் தாங்கள் தங்கியிருந்த விடுதிகளைக் காலி செய்து விட்டு வந்து விட்டதால் தங்களுக்கு தங்குவதற்கு வசதி செய்யும்படி கோரியுள்ளனர். அவர்களில் பலர் தாங்கள் கொண்டு வந்திருந்த மருந்துகள் கூட தீர்ந்து விட்டதாகவும் கூறியுள்ளனர். ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு வயதான பயணி அங்கு நிலவி இருந்த குளிரைத் தாங்க முடியாமல் காலியாகி விட்ட தனது ஆஸ்துமா இன்ஹேலரை மீண்டும் மீண்டும் உறிஞ்சிக் கொண்டிருந்ததையும் மூச்சு விட முடியாமல் கஷ்டப்பட்டு கொண்டிருந்ததையும் மற்ற பயணிகள் பார்த்துள்ளனர்.

அலையன்ஸ் ஏர் விமான நிறுவனம் மோசமான வானிலைக் காரணமாக விமானச் சேவை இரத்து செய்வதாக அறிவித்துள்ளனர். ஆனால் அதே சமயங்களில் மற்ற நிறுவனங்கள் விமானச் சேவை வழங்கி வருகின்றன. அலையன்ஸ் ஏர் விமான நிறுவனம் அடிக்கடி தனது விமானச் சேவையை நிறுத்தி விடுகின்றது. போதிய பராமரிப்பு இல்லாமையையும் ஊழியர்களின் கவனக்குறைவான பணிகளும் தான் இதற்குக் காரணம் என பயணிகள் கூறுகின்றனர். மேலும் அதே சமயங்களில் இண்டிகோ மற்றும் பிளை 91 போன்ற விமான நிறுவனங்கள் இலட்சத்தீவுகளுக்குத் தொடர்ந்து பயணிகள் விமானத்தை இயக்கி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் செல்ல இருந்த விமானம் இரத்து செய்யப்பட்டதால் அதில் பயணம் செய்ய இருந்த 50 பயணிகள் கடும் சிரமத்துக்குள்ளாயினர்.

மேலும் சென்னை விமான நிலையத்துக்கு வர வேண்டி இருந்த விமானம் ஒன்று காலதாமதமாக வந்தது. சென்னையில் இருந்து புறப்பட இருந்த 2 விமானங்களும் ஒரு மணி நேரம் காலதாமதமாகப் புறப்பட்டன. பெங்களூருக்குச் செல்ல இருந்த 3 விமானங்கள் அகமதாபாத் மற்றும் கொச்சிக்குச் செல்ல இருந்த 2 விமானங்களும் காலதாமதமாக புறப்பட்டுச் சென்றன. கோலாலம்பூருக்குச் சென்ற விமானமும் ஒரு மணி நேரம் காலதாமதமாகப் புறப்பட்டு சென்றது. கடந்த ஏப்ரல் மாதத்தின் மத்தியில் இருந்து மத்திய ஆசிய நாடுகளில் கூட பல வெளிநாட்டுப் பயணிகள் விமானங்கள் மோசமான வானிலை மற்றும் கடும் மழை போன்ற இயற்கை இடர்களால் இரத்து செய்யப்பட்டுள்ளன என்றாலும் அந்த நிறுவனங்கள் பயணிகளுக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்து தருவதுடன், அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் உறைவிடம் வழங்கி வருகின்றன.

ஆனால் நமது நாட்டில் உள்நாட்டுக்குச் சேவை வழங்கும் விமான நிறுவனங்கள் விமானப் பயணிகளுக்கு இது போன்ற வசதிகளைச் செய்து தருவதில்லை. ஒரு சமயம் திருவனந்த புரத்தில் இருந்து புறப்பட இருந்த விமானம் சுமார் 30 நிமிடங்கள் காலதாமதமாகப் புறப்படும் என அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து பல மணி நேரங்களுக்கு காலதாமதத்தை நீட்டிக் கொண்டே வந்து இறுதியில் இரவு 01.00 மணி அளவில் அந்த விமானம் இரத்து செய்யப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது. பயணிகளுக்கு டிக்கட் தொகை திரும்பி வழங்கப்படும் என்று மட்டுமே அறிவித்த அந்த நிறுவனம் பயணிகள் தங்கள் வீட்டுக்குத் திரும்பி செல்லவோ அல்லது தங்குவதற்கோ எந்த வசதியும் செய்து தரவில்லை. அந்த நள்ளிரவில் அந்தப் பயணிகள் கடும் இன்னலுக்கு உள்ளாயினர்.

எனவே, இது போன்ற நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு விமானப் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைப்ப தற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தக்க உத்தரவுகளைப் பிறப்பிக்கும் படி தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் தவிர்க்க முடியாத காரணங்களால் விமானச் சேவை இரத்து செய்யப்படும் போது பாதிக்கப்பட்ட பயணிகள் தங்குவதற்கு உறைவிடமும், உணவும் வழங்குவதை உறுதி செய்யும்படியும் தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

### சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உரிய காலத்தில்

## நிதியுதவி கிடைத்திட, ஒன்றிய அரசில் முன்னெடுப்புகள் ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா?

### மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 29-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில், உரிய காலத்தில் நிதியுதவி கிடைக்காதால் சிறு, குறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதா? என்றும், அவர்களின் விற்பனை பொருட்களுக்கு உரிய பணப் பட்டுவாடா உரிய நேரத்தில் திரும்ப கிடைக்கிறதா? என்றும் இவற்றை மேம்படுத்த ஒன்றிய அரசு ஏதேனும் முன்முயற்சிகளை எடுத்துள்ளதா? என்றும் அதன் விபரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சர் டாக்டர் ஜித்தன் ராம் மாஞ்சியிடம் கேள்வி எழுப்பினார்.



ஒன்றிய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சர் அளித்த பதில் வருமாறு:

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளின் நிதி பாதுகாப்பிற்காக, கடன் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ், கடந்த ஜூன் 2024 வரையில் ரூபாய் 6, 78, 326 கோடிகள்அளவிற்கு கடன் உறுதியளிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், 9 இலட்சத்தில் மேலான சிறு தொழில் நிறுவனங்களில், 79 இலட்சத்திற்கும் அதிக மானோருக்கு வேலை வாய்ப்புகள் வழங்குவதற்காக ரூ25,500 கோடி அளவிற்கு பிரதம மந்திரி வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது என்றும், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் விற்பனை பொருட்களுக்கான பணப் பட்டுவாடா அவர்களுக்கு விரைவில் கிடைப்பதற்காக சமாதான் என்ற கணிணி செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், கடந்த ஜூன் 2024 வரையில் ரூபாய் 21,583 கோடி நிலுவையில் உள்ளது என்றும் அமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், அவர்களின் விற்பனைத் தொகை விரைவில் கிடைப்பதற்காக, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சட்டம் 2006ன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், தமிழ்நாடு, கேரளா போன்ற11 மாநிலங்களில் 159க்கும் மேற்பட்ட சிறப்பு நிதியுதவி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றும், பொதுத் துறை நிறுவனங்களின் பணப் பட்டுவாடா உரிய நேரத்தில் கிடைக்கும் வகையில் ஒன்றிய அரசு தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்றும் அமைச்சர் ஜித்தன் ராம் மாஞ்சி பதில் அளித்தார்.

### மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. - க.சுப்பிரமணியன் பங்கேற்பு

## நெல்லை - கிழக்கு - மத்திய மாவட்டங்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் கண்டன உரை!

நெல்லை, ஜூலை 29-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை கிழக்கு மற்றும் மத்திய மாவட்டம் சார்பில் நெல்லை சந்திப்பு இரயில் நிலையம் முன்பு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், பாளை சட்ட மன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப்,மாநகரச் செயலாளர் சு.சுப்பிர மணியன், மாவட்ட அவைத் தலைவர்கள் கிரகாம்பெல், முருகன்,

மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஒன்றிய அரசை கண்டித்து திருநெல்வேலி அல்வா, அவித்த முட்டை விநியோகம் செய்யப்பட்டது. முட்டையை கையில் ஏந்தியபடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்நிகழ்வில் மாநில மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி பங்கேற்று கண்டன உரையாற்றினார்.

நிகழ்வில் மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம்,ஏ.எல். எஸ்.லட்சுமணன்,பேச்சிபாண்டியன், சித்திக், பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன்,கனகராஜ்,கே.ஆர். ராஜ்,பி.எம். சரவணன்,நடராஜன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் நம்பி, மாஞ்சோலை மைக்கேல், தமயந்தி, தர்மன், எஸ்.வி.சுரேஷ், கிரிஜா குமார், பொருளாளர் வண்ணை சேகர்,ஒன்றிய செயலாளர்கள் தங்கபாண்டியன், போர்வெல் கணேசன், வேலங்குளம் கண்ணன், செல்வ கருணாநிதி, ராஜன், ஜோசப் பெல்சி, ஆரோக்கிய எட்வின், ஜெகதீஸ், பரணி சேகர், அன்பழகன்,அருள் மணி, மாரியப்பன், முத்துப் பாண்டி என்ற பிரபு உள்பட கழக நிர்வாகிகள்,மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவாலங்காடு ஒன்றியம் நல்லாட்டூர் ஊராட்சி பகுதியில் நெமிலி,என்.என்.கண்டிகை,நல்லாட்டூர்,சிவாடா, பொன்பாடி, பூனிமாங்காடு மற்றும் தாழவேடு ஆகிய ஊராட்சிகளுக்கான மக்களுடன் முதல்வர் முகாம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, முகாமை துவக்கி வைத்து பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து நடவடிக்கை மேற்கொண்ட பயனாளிகளுக்கு பல்வேறு சான்றிதழ்கள் வழங்கினார். உடன் தாசில்தார் மலர்விழி, ஒன்றிய செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் கலையரசிகமலநாதன், நிர்வாகிகள் ஜெயராமன், காஞ்சிபடி யுவராஜ், எஸ்.திலகன்,உள்பட பலர் உள்ளனர்.